# TNPSC TET SI EXAM

## 10. 7ஆம் வகுப்பு Q அறிவியல் தேர்வு

7th Standard

1) ஒரு பொருளின் வெப்பம் அல்லது குளிர்ச்சியின் அளவீடு ______ என்றழைக்கப்படுகிறது.

(a) வெப்பநிலை (b) அடர்த்தி (c) பருமன் (d) நீளம்

2) வெப்பநிலையின் SI அலகு _____ ஆகும்.

(a) செல்சியஸ் (b) பாரன்ஹீட் (c) கெல்வின் (d) சென்டிகிரேட்

3) பாதரசத்தின் கொதிநிலை_______ ஆகும்.

(a) −100°C (b) –39°C (c) 452°C (d) 357°C

4) ஆல்கஹாலின் உறைநிலை -100°C-ஐ விட______ ஆகும்.

(a) குறைவு (b) அதிகம் (c) சமம் (d) குறைவு அல்லது அதிகம்

5) உடலின் வெப்பநிலை _____ அலகில் அளவிடப்படுகிறது.

(a) செல்சியஸ் (b) கெல்வின் (c) பாரன்ஹீட் (d) இவற்றில் ஏதுமில்லை

6) ஆய்வக வெப்பநிலைமானியில் அளவிடக்கூடிய பெரும அளவு________ ஆகும்.

(a) 42°C (b) 100°C (c) 140°C (d) 110°C

7) வெப்பநிலைமானிகளில் பயன்படுத்தப்படும் திரவம் _____ ஆகும்.

(a) பாதரசம் (b) நீர் (c) அயோடின் (d) ஆல்கஹால்

8) செல்சியஸ் அளவீட்டுமுறை _____ என்பவரின் பெயரால் அழைக்கப்படுகிறது.

(a) ஆண்ட்ரஸ் செல்சியஸ் (b) டேனியல் கேப்ரியல் பாரன்ஹீட்

(c) வில்லியம் லார்டு கெல்வின் (d) டாரிசெல்லி

9) நீரின் உறைநிலைப் புள்ளி______ K ஆகும்.

(a) 273.15 (b) 310.15 (c) 296.15 (d) 373.15

10) 20°C யை கெல்வின் அலகிற்கு மாற்றுக.

(a) 273.15 K (b) 293.15 K (c) 253.15 K (d) 303.15 K

11) அணுவிலுள்ள நேர்மின்சுமையுடைய துகள் _____ ஆகும்.

(a) எலக்ட்ரான் (b) நியூட்ரான் (c) புரோட்டான் (d) இவற்றில் எதுவுமில்லை

12) மின்னோட்டத்தின் SI அலகு_____ ஆகும்.

(a) ஆம்பியர் (b) கூலும் (c) ஓம் (d) வோல்ட்

13) மரபு மின்னோட்டம் எலக்ட்ரான்களின் ஓட்டத்திற்கு______ திசையில் அமையும்.

(a) அதே (b) எதிர் (c) இணையாக (d) நேரான

14) முதன்மை மின்கலனுக்கு சிறந்த உதாரணம் ______ ஆகும்.

(a) லித்தியம் உருளை மின்கலன் (b) கார /அமில மின்கலன்

(c) மோட்டார் வாகன மின்கல அடுக்கு (d) உலர் மின்கலன்

15) முதன்மை மின்கலம் ______ ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது.

(a) 1887 (b) 1897 (c) 1987 (d) 1877

16) உலர்மின்கலன்கள் பொதுவாக____ களில் பயன்படுத்தப்படுகின்றன.

(a) கைபேசி (b) மோட்டார் வாகனம் (c) பொம்மைகள்

(d) மின்னேற்றம் செய்யப்பட்ட விளக்கு

17) ____ மின்கடத்தும் திறன் பெற்றது.

(a) மரக்கட்டை (b) கண்ணாடி (c) இரப்பர் (d) தாமிரம்

18) தொடர் இணைப்பில் இணைக்கப்பட்ட மின்விளக்குகள்_______ பிரகாசத்துடன் ஒளிரும்.

(a) அதிக (b) குறைந்த (c) அதிக அல்லது குறைந்த (d) இவற்றில் ஏதுமில்லை

19) ______ ஒரு அரிதிற்கடத்தியாகும்.

(a) இரப்பர் (b) தாமிரம் (c) அலுமினியம் (d) வெள்ளி

20) மின்காந்தங்கள் இவற்றில் பயன்படுத்தப்படவில்லை.

(a) மின்சார மணி (b) மின்தூக்கி (c) ஆய்வகம் (d) தொலைபேசி

21) துகள்கள் ஒவ்வொன்றும் மற்றொன்றுக்கு தொலைவில் அமைந்திருப்பது

(a) திண்மம் (b) திரவம் (c) வாயு (d) இவற்றில் ஏதுமில்லை

22) புதிய பொருள் உண்டாகாத மாற்றம்_____ மாற்றமாகும்.

(a) வேதியியல் (b) இயற்பியல் (c) வேதியியல் மற்றும் இயற்பியல்
(d) வேதியியல் அல்லது இயற்பியல்

23) _______ என்பது ஆவி சுருங்குதல் எனப்படும்.

(a) வாயுவிலிருந்து திரவத்திற்கு மாறுவது (b) திரவத்திலிருந்து திண்மத்திற்கு மாறுவது
(c) திரவத்திலிருந்து வாயுவிற்கு மாறுவது (d) திண்மத்திலிருந்து திரவத்திற்கு மாறுவது

24) ______ என்ற நிகழ்வில் ஒரு திரவம் வெப்பத்தினை ஏற்று அதன் வாயு நிலைக்குச் செல்கிறது.

(a) ஆவி சுருங்குதல் (b) உறைதல் (c) கொதித்தல் (d) உருகுதல்

25) _______ என்ற நுட்பத்தினை பயன்படுத்தி கரைந்த நிலையில் உள்ள திண்மங்களை அதன் திண்மம் - திரவம் கலவையில் இருந்து பிரிக்க முடியும்.

(a) கொதித்தல் (b) ஆவியாதல் (c) வடிகட்டல் (d) உருகுதல்

26) ஆவியாதல் ஒரு மெதுவாக நடைபெறும் நிகழ்வு மற்றும் திரவங்களில்______ மட்டுமே நடைபெறும்.

(a) புறப்பரப்பு (b) அடிப்பகுதி (c) மிக ஆழமான பகுதி (d) இவற்றில் ஏதுமில்லை

27) வீடுகளில் கற்பூரம் வைக்கப்பட்டிருப்பது________ வராமல் பாதுகாப்பதற்காக.

(a) நாய் (b) பூனை (c) பல்லி (d) கொசு

28) வேதியியல் மாற்றத்திற்கு சிறந்த உதாரணம்_____ ஆகும்.

(a) இரப்பர் வளையம் நீட்சியடைதல் (b) மின்விளக்கு ஒளிர்தல் (c) பால் தயிராக மாறுதல்
(d) காய்கறிகளை வெட்டி வைத்தல்

29) டெல்லியில் உள்ள குதுப் வளாகத்தில்____ தூண் உள்ளது.

(a) தாமிரம் (b) இரும்பு (c) அலுமினியம் (d) சோடியம்

30) நொதித்தல் மினை நடைபெற உதவும் உயிரினம்_______

(a) கொசு (b) வீட்டு ஈ (c) ஈஸ்ட் (d) தவளை

31) ______ சிற்றினத்தை நம் கண்களால் காண இயலாது.

(a) வீட்டு ஈ (b) கொசு (c) சால்மோனெல்லா (d) எலும்பு

32) ______ ஒரு பல செல் உயிரினமாகும்.

(a) கிளாமிடோமோனாஸ் (b) அமீபா (c) வெங்காயம் (d) பாக்டீரியா

33) ஒரு ________என்பது குறிப்பிட்ட செயல்களைச் செய்வதற்காக உருவான செல்களின் குழுக்களாகும்.

(a) உறுப்பு (b) திசு (c) செல் (d) உயிரினம்

34) விலங்கு செல்லைச் சுற்றி எல்லையாக இருப்பது_______ ஆகும்.

(a) பிளாஸ்மா சவ்வு (b) உட்கரு உறை (c) செல் சுவர் (d) இவற்றில் ஏதுமில்லை

35) செல்களிலுள்ள நுண்ணுறுப்புகளில் மிகப்பெரிய நுண்ணுறுப்பு______ ஆகும்.

(a) மைட்டோகாண்ட்ரியா (b) பசுங்கணிகம் (c) ரிபோசோம்கள் (d) உட்கரு

36) _______புரோட்டீன் மற்றும் பாலிபெப்டைடுகளை ஒன்றிணைக்கிறது.

(a) சென்ட்ரியோல் (b) ரிபோசோம் (c) பசுங்கணிகம் (d) கோல்கை உறுப்பு

37) ______ தாவர செல்களில் மட்டும் காணப்படும் செல் நுண்ணுறுப்பு ஆகும்.

(a) பசுங்கணிகம் (b) செல்சுவர் (c) சென்ட்ரியோல்கள் (d) லைசோசோம்கள்

38) ______ செல்கள் உடலின் பல்வேறு பகுதிகளுக்கு ஆக்சிஜனை எடுத்துச் செல்வதும் அப்பகுதியிலிருந்து $CO_2$ ஐ சேகரிப்பதுமாகும்.

(a) நரம்பு (b) இரத்த சிவப்பு (c) தசை (d) எபிதீலியல்

39) தட்டையான மற்றும் நுண் வடிவச் செல்கள் என்பவை_______

(a) எபிதீலியல் செல்கள் (b) தசை செல்கள் (c) நரம்பு செல்கள் (d) இரத்த சிவப்பு செல்கள்

40) பழங்கள் பழுக்கும் போது பசுங்கணிகங்கள்______ ஆக மாறுகின்றன.

(a) கோல்கை உடலம் (b) லைசோசோம்கள் (c) மைட்டோகாண்ட்ரியா
(d) வண்ணக்கணிகங்கள்

41) உட்கருவினுள் காணப்படும் புரோட்டோபிளாசத்தின் பெயர்______ ஆகும்.

(a) அமைலோபிளாஸ்ட் (b) நியூக்ளியோபிளாசம் (c) சைட்டோபிளாசம்
(d) காமிட்டோபிளாசம்

42) கோள வடிவ, மரபு பண்புகளை கொண்ட செல் நுண்ணுறுப்பு_____ ஆகும்.

(a) செல் சுவர் (b) ரிபோசோம் (c) உட்கரு (d) மைட்டோகாண்ட்ரியா

43) ________ ஒரு வெப்ப இரத்த விலங்கு ஆகும்.

(a) மீன் (b) ஊர்வன (c) பாலூட்டிகள் (d) இருவாழ்விகள்

44) மூன்று ஜோடிக்கும் மேற்பட்ட கால்களைக் கொண்ட உயிரி_______ ஆகும்.

(a) தேள் (b) எறும்பு (c) கரப்பான் பூச்சி (d) வண்டு

45) _____ அனைத்து உயிரினங்களையும் தாவரங்கள் அல்லது விலங்குகள் எனப் பிரித்தார்.

(a) லின்னேயஸ் (b) அரிஸ்டாட்டில் (c) காஸ்பார்டு பாஹின் (d) விட்டேக்கர்

46) ______ என்பது குழியுடலிகள் தொகுதியைச் சார்ந்தது.

(a) பிளனேரியா (b) கல்லீரல் புழு (c) நாடாப்புழு (d) ஹைட்ரா

47) உடற்கண்டமற்ற மனிதனின் ஒட்டுண்ணிகளாக வாழும் உயிரினம்_____ ஆகும்.

(a) மண்புழு (b) நீரிஸ் (c) அட்டை (d) அஸ்காரிஸ்

48) பல்வேறுபட்ட பல்அமைவு மற்றும் இரு பல் அமைவு கொண்ட விலங்கு______ ஆகும் .

(a) கடல் ஆமை (b) முதலை (c) புலி (d) வீட்டுப்பல்லி

49) ஆல்காக்களின் தாவர உடலம்____ எனப்படும்.

(a) பெரணி (b) காரா (c) தாலஸ் (d) மோல்டுகள்

50) பின்வருவனவற்றில் ஒரு வித்திலை தாவரம் எது?

(a) நெல் (b) புளி (c) மாமரம் (d) பட்டாணி செடி

51) _____ பூஞ்சை உலகத்தைச் சார்ந்தது ஆகும்.

(a) அமீபா (b) பாரமீசியம் (c) பாக்டீரியா (d) ஈஸ்டுகள்

52) வேப்பமரத்தின் அறிவியல் பெயர்______ ஆகும்.

(a) அல்லியம் சட்டைவம் (b) ஜிஞ்சிபர் அஃபிளினேல் (c) அசாடிரேக்டா இண்டிகா
(d) காரிகா பப்பாயா

53) Tux Paint ஐ முதலில் தொடங்கும் போது_______ திரை தோன்றும்.

(a) தலைப்பு (b) முதன்மை (c) வண்ணம் (d) பலவிதக் கருவி

54) Tux Paintல்______திரையானது பலவகைப் பகுதிகளாக பிரிக்கப்பட்டுள்ளது.

(a) தலைப்பு (b) வண்ணம் (c) கருவி (d) முதன்மை

55) Tux Paintsல் ______ என்பது வரையவும், திருத்தங்கள் செய்யவும் பயன்படுகிறது.

(a) படம் வரையும் பகுதி (b) கருவிப்பட்டை (c) வண்ணங்கள் (d) முதன்மைதிரை

56) Tux Paintல் திரையின்______ இல் பல வண்ணங்கள் இடம் பெற்றிருக்கும்.

(a) மேல்பகுதி (b) இடப்பக்கம் (c) கீழ்ப்பகுதி (d) வலப்பக்கம்

57) ______ கருவியைப் பயன்படுத்தி நிரப்பப்பட்ட அல்லது நிரப்பப்படாத வடிவங்களை வரையலாம்.

(a) பனுவல் (b) வடிவங்கள் (c) அழிப்பான் (d) சேமி

58) நீக்கம் செய்த செயலை மீண்டும் நிகழச்செய்ய பயன்படும் கருவி____ ஆகும்.

(a) முன்செயல் நீக்கம் (b) செயல்மீட்டல் (c) பனுவல் (d) வெளியேறுதல்

59) Open செய்ய பயன்படும் குறுக்குவழி விசை எது?

(a) Ctrl + O (b) Ctrl + N (c) Ctrl + P (d) Ctrl + S

60) மருத்துவர்கள் _______ வெப்பநிலைமானியினைப் பயன்படுத்தி மனிதனின் உடல் வெப்பநிலையினை அளவிடுகின்றனர்

61) அறைவெப்ப நிலையில் பாதரசம் _______ நிலையில் காணப்படுகிறது.

62) வெப்பஆற்றலானது _______ பொருளில் இருந்து ______ பொருளுக்கு மாறுகிறது.

63) $-7^0C$ வெப்பநிலையானது $0^0C$ வெப்பநிலையினை விட ______ .

64) பொதுவாக பயன்படுத்தப்படும் ஆய்வக வெப்பநிலைமானி _______ வெப்பநிலைமானி ஆகும்.

65) மரபு மின்னோட்டத்தின் திசை, எலக்ட்ரானின் பாயும் திசைக்கு _______ ல் அமையும்.

66) ஓரலகு கூலூம் மின்னோட்டமானது ஏறக்குறைய ________ புரோட்டான்கள் அல்லது எலக்ட்ரான்களைக் கொண்டிருக்கும்.

67) மின்னோட்டத்தை அளக்க ________ என்ற கருவி பயன்படுத்தப்படுகிறது.

68) மின்கடத்துப் பொருட்களில், எலக்ட்ரான்கள் அணுக்களோடு ______ பிணைக்கப்பட்டிருக்கும்.

69) மின்கடத்துத்திறனின் S.I. அலகு _____ ஆகும்.

70) ஒரு பலூனினுள் வெப்பக் காற்றினை அடைப்பது __________ மாற்றமாகும்.

71) தங்க நாணத்தினை ஒரு மோதிரமாக மாற்றுவது __________ மாற்றமாகும்.

72) ஒரு காஸ் சிலிண்டரின் திருகினை திருப்புவதன் மூலம் __________ எரிபொருள் __________ எரிபொருளாக மாறும். இது __________ மாற்றத்திற்கு எடுத்துக்காட்டாகும்.

73) உணவு கெட்டுப்போதல் என்பது __________ மாற்றமாகும்.

74) சுவாசம் என்பது __________ மாற்றமாகும்.

75) செல்லில் உள்ள ஜெல்லி போன்ற பொருள் ________ என்று அழைக்கப்படுகிறது.

76) நான் தாவரத்தில் சூரிய ஆற்றலை உணவாக மாற்றுவேன். நான் யார்? __________

77) முதிர்ந்த இரத்தச் சிவப்பு செல்லில் __________ இல்லை

78) ஒரு செல் உயிரினங்களை _________ மூலமே காண இயலும்.

79) சைட்டோபிளாசம் + உட்கரு = _______

80) ______ 1623 ல் இருசொற்பெயரிடு முறையை அறிமுகப்படுத்தினார்.

81) சிற்றினம் என்ப து __________ வகைப்பாட்டின் நிலை ஆகும்.

82) ______ பச்சையமற்ற மற்றும் ஒளிச் சேர்க்கை தன்மையற்றது.

83) வெங்காயத்தின் இரு சொற் பெயர் _______

84) ______ தந்தை, கரோலஸ் லின்னேயஸ் ஆவர்.

MATCH

| | |
|---|---|
| 85) மருத்துவ வெப்பநிலைமானி | (1) மின்சுற்றில் பயன்படுத்தப்படும் ஓர் பாதுகாப்பு சாதனம் |
| 86) சாதாரண மனிதனின் உடல் வெப்பநிலை | (2) மோல்டுகள் |
| 87) வெப்பம் | (3) வண்ணத்துப்பூச்சி |
| 88) நீரின் கொதிநிலை | (4) லைசோசோம் |
| 89) நீரின் உறைநிலை | (5) $37^oC$ |
| 90) மின்கலம் | (6) ஆற்றல் |
| 91) சாவி | (7) மின்சுற்றை திறக்க அல்ல து மூட பயன்படுகிறது |
| 92) குறு சுற்று துண்டிப்பான் | (8) பசுங்கணிகம் |
| 93) தற்கொலைப் பை | (9) $100^oC$ |
| 94) கட்டுப்பாட்டு அறை | (10) உட்கரு |
| 95) உணவு தயாரிப்பாளர் | (11) பாக்டீரியா |
| 96) மொனிரா | (12) யூக்ளினா |
| 97) புரோடிஸ்டா | (13) $0^oC$ |
| 98) பூஞ்சை | (14) வேம்பு |
| 99) ப்ளாண்டே | (15) வேதி ஆற்றலை,மின் ஆற்றலாக மாற்றும் சாதனம் |

100) அனிமேலியா (16) உதறுதல்